# பாடசாலைகளில் ஒழுக்க விழுமியங்கள் பேணுதல் (மாணவர்)

**CIRCULAR NO.**

**MOE - 2005/17**

**MOE - 2016/12**

சுற்றுநிருபங்களை [www.vnzone.lk](http://www.vnzone.lk) எனும் வலய இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.LENIN, ZDE, VN



# நோக்கம்

“ மாணவர்களிடமிருந்து வெளிப்படும் உசிதமற்ற

நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும் நோக்கில் வழங்கப்படும்

தண்டனைகளை ஒழுங்குபடுத்துவதும்,


உடல் ரீதியான துன்புறுத்தல்களை தவிர்ப்பதும் ”

# பாடசாலையினுள் ஒழுக்கம்

- பாடசாலை தனக்கென பிரத்தியேக அங்கீகரிக்கப்பட்ட ஒழுக்கக் கோவை ஒன்றை வைத்திருத்தல்.
- பாடசாலையின் ஒழுக்கக்கோவைக்கு அனைவரும் இணங்கியொழுகுதல்.
- மாணவர்களில் சுய ஒழுக்கத்தை ஏற்படுத்துதல் — உணர்வுசார் சிறந்த உறவு ஊடாக —இந்த இயலுமை உள்ளவர்களே ஆசிரியர்கள்.
- பிள்ளைகளின் வயது, பிரதேசத்துக்குரிய தனிப்பட்ட சிக்கல்கள் வெளிப்படுகையில் அடையாளம் கண்டு புரிந்து பொருத்தமான தீர்வு நோக்கி நகரும் அறிவு, ஆற்றல் ஆசிரியர்களிடம் இருத்தல்.

# In Loco Parentis

## மாற்றுப் பெற்றோர்
## இடம்சார் பெற்றோர்




## மாணவர் பாதுகாப்பில், கௌரவத்தில் பெற்றோருக்கு சமனான பொறுப்பு ஆசிரியருக்கும் உண்டு

"Building character in students requires **understanding**, **guidance**, and **positive reinforcement**, not just **punishment**.

Let our approach be rooted in **compassion** and **correction**, not **coercion**."

"மாணவர்களிடம் நற்குணாதிசயத்தை கட்டியெழுப்ப, புரிதல், வழிகாட்டுதல் மற்றும் நேர் வலுவூட்டல் தேவை, **தண்டனை அல்ல.**

எங்கள் அணுகுமுறை கருணை மற்றும் திருத்தத்தில் வேரூன்றட்டும், வலுக்கட்டாயத்தில் அல்ல."

# உடல்ரீதியான தண்டனை

- எதிர்பார்க்கப்படும் நடத்தைகளுக்கு மாறான நடத்தைகளை தடுப்பதற்காக **உடலுக்கு வேதனை தரும் வகையில்** வழங்கப்படும் தண்டனைகள். இவை **துன்புறுத்தலாக** கொள்ளப்படும்.
- 1989 ஐக்கிய நாடுகள் சிறுவர் உரிமை சமவாய 28(2) பிரிவின்படி பிள்ளைகளின் மானிட கௌரவம் பாதுகாக்கப்பட வேண்டும்.

## உடல் ரீதியான தண்டனையின் விளைவுகள்

- கற்றல் நடவடிக்கை பாதிப்பு
- எதிர் காலத்தில் சமூக எதிர்ப்பு நடத்தைகள் வன்முறை, ஆக்கிரமிப்பு, பழிவாங்கல்...
- கடுமையான மனநிலை பாதிப்பு — உளக் கலக்க நிலை
- சிறுவர் துஷ்பிரயோக அபாயம் அதிகரித்தல்.
- மாணவர்-ஆசிரியர்-அதிபர் உறவு இடைவெளி
- தோல்வி மனப்பான்மை வளருதல்
- உடற்றண்டனை மூலம் முன்னேற்றம் மிகக்குறைவு.
- சாதகத்தை விட பாதக விளைவுகள் அதிகம்

# உடல்ரீதியான தண்டனை

உடல் ரீதியான தண்டனை வழங்காது ஒழுக்கத்தை பாதுகாக்க முடியாத பட்சத்தில்

## திறமையற்ற ஆசிரியர்

**என்ற தவறான முத்திரை குத்தப்படுகிறது.**

**எனவே ஆசிரியர்கள் உடல் ரீதியான தண்டனை அற்று ஒழுக்கத்தை பேணுவதற்கான ஆற்றல்களை பெற தமது வாண்மையை தொடர்ச்சியாக விருத்தி செய்தல் வேண்டும்.**

# பாடசாலை ஒழுக்காற்றுக் குழு

ஒவ்வாத நடத்தையை பிரதிபலிக்கும் மாணவர்களை உகப்பான நடத்தைகளுக்கு பழிக்கப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக..





## குழுக் கட்டமைப்பு

- அதிபர்
- பிரதி / உதவி அதிபர்
- பிரிவுத்தலைவர்
- ஒழுக்கத்துக்கு பொறுப்பளிக்கப்பட்ட ஆசிரியர்
- வழிகாட்டலும் ஆலோசனையும் ஆசிரியர்
- மாணவர் தொகைக்கு ஏற்றவாறு வேறு ஆசிரியர்கள்.

# மாணவர் பொருத்தமற்ற நடத்தைக்கான ஒழுக்காற்றுக்குழுவின் பணிகள்

- குழு அமைக்கப்பட்ட அறிக்கை, கோப்புக்களை உருவாக்கி பேணுதல்.
- பொருத்தமற்ற நடத்தை தொடர்பில் முறைப்பாடு கிடைக்கையில் கூட்டத்தை கூட்டுதல்
- முறைப்பாடு தொடர்பில் விசாரணை நடாத்துதல்
- சாட்சியங்களை சேகரித்து முறையாக பேணுதல்
- குழுக்கூட்டத்தில் சட்டங்கள், தாபன விதிக்கோவை, சுற்றுநிருபங்கள் அடிப்படையில் நடவடிக்கைக்கான தீர்மானம் மேற்கொள்ளுதல்.

  - ஒழுக்கக்கோவைக்கான விழிப்புணர்வுகளை மேற்கொள்ளுதல்
  - ஒழுக்கத்திற்கு ஊக்குவிக்கும் காரியங்களை நடைமுறைப்படுத்துதல்
  - சிறிய தவறுகளை புரியவைத்து திருத்துதல்

# ஒழுக்கத்துக்கு மாறான கடுமையான செயற்பாடுகளின்போது தண்டனைகள்

- எச்சரித்தல்.

- பெற்றோர், பாதுகாவலர்களை அழைத்து விளங்க வைத்து அறிவுறுத்தல்.

- ஒழுக்காற்றுக் குழு தீர்மானத்துடன் சிறப்புரிமைகளை இடைநிறுத்துதல் / மட்டுப்படுத்துதல்

  (வகுப்பு முதல்வர், மாணவ முதல்வர், கழக தலைமைத்துவங்கள், விளையாட்டு சந்தர்ப்பங்கள்..)

# ஒழுக்கத்துக்கு மாறான கடுமையான செயற்பாடுகளின்போது தண்டனைகள்

- ஒழுக்காற்றுக்குழு தீர்மானத்துடன் கல்விப்பணிப்பாளருக்கும், பெற்றோர் –பாதுகாவலர் ஆகியோருக்கு அறிவுறுத்தி இரு வாரத்துக்கு மேற்படாத வகுப்புத்தடை விதித்தல்

- ஒழுக்காற்றுக்குழு தீர்மானத்துடன் கல்விப்பணிப்பாளரின் அனுமதி பெற்று பெற்றோர் –பாதுகாவலர் ஆகியோருக்கு அறிவுறுத்தி இரு வாரத்துக்கு மேற்பட்ட வகுப்புத்தடை விதித்தல்

- ஒழுக்காற்றுக்குழு தீர்மானத்துடன் கல்விப்பணிப்பாளர் ஊடாக மாகாணக் கல்விப் பணிப்பாளரின் அனுமதி பெற்று பெற்றோர் –பாதுகாவலர் ஆகியோருக்கு அறிவுறுத்தி வேறொரு பாடசாலையின் அதே தரத்தில் இணைத்தல்.

# ஒழுக்கத்துக்கு மாறான கடுமையான செயற்பாடுகளின்போது தண்டனைகள்

- சிறப்புரிமை மறுப்பு, வகுப்புத்தடை, பாடசாலை மாற்றங்கள் எனும் தீர்மானங்களுக்கு வருகையில்

  - உரிய முறைகள் பின்பற்றப்படல்
  - பூரண ஆவணங்கள் பேணப்படல்
  - மிக இறுக்கமான இரகசியக்காப்பு
  - பிள்ளையின் சுயகௌரவக் காப்பு

- வகுப்புத்தடை, பாடசாலை மாற்றம் ஆகிய தண்டனை அமுல்படுத்தலில்

— சம்பவத்திரட்டுக் குறிப்பு கட்டாயம்.

# உடல் ரீதியான தண்டனை வழங்கின் முகம்கொடுக்கவேண்டி வரக்கூடிய சட்ட நடவடிக்கைகள்

- அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கு

இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியல் யாப்பின் iii பந்தியின் 11வது பிரிவு, XVi பந்தியின் 126 வது பிரிவு

- தண்டனைச்சட்டக்கோவை ஊடான —வழக்கு
  - 1995 ம் ஆண்டின் 22 ம் இலக்க தண்டனைச்சட்டக்கோவையின் 3வது பிரிவு
  - முதன்மைச் சமவாயத்தின் 308 (அ) பிள்ளைகளின் மீதான சித்திரவதை

- ஒழுக்காற்று நடவடிக்கைகள்
  - தாபன விதிக்கோவையின் II வது தொகுதியின் படியான விசாரணை ஊடாக

# சிறுவர் துஷ்பிரயோகம்

சிறுவர் பராயத்துக்கு உகந்ததல்லாத செயற்பாடுகளில் சிறுவர்களை ஈடுபடுத்துதல்

பாலியல் துஷ்பிரயோகம், உடலியல் துஷ்பிரயோகம் —பாரதூரமான குற்றங்கள்

செல்வாக்கு செலுத்தக்கூடிய இன்னொரு அதிகாரமட்டம்

**1998 ம் ஆண்டின் 50 இலக்க பாராளுமன்றச் சட்டத்தின் அடிப்படையில்**

**தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை**

# மாணவரை தூண்டுதல்

பாடசாலை அலுவலர் / அலுவலர்கள் ஒழுக்கத்துக்கு எதிராக செயற்படுமாறு மாணவர்களை தூண்டுதல் — மேற்குறிப்பிட்ட 3 வகை சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடிய குற்றமாகும்.

# THANK YOU